A920

உ

சிவமயம்

THE SAIVA PRAKASA PRESS

மகோற்ஸவ காலத்

# தமிழ் வேதத் திருமுறைத் திரட்டு

வெளியீடு :

அகில இலங்கைச் சைவக் குருமார் அர்ச்சகர் சபை

தொகுத்தவர் :

'கிரியா வித்தகர்' 'குருமணி'
சிவத்திரு க. சிவபாதசுந்தரக் குருக்கள்
மயிலிட்டி தெற்கு,
தெல்லிப்பழை.

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

A990

PROF. V. SIVASAMY
JAFFNA

உ

சிவமயம்



11448.5.C

மகோற்சவ காலத்

# தமிழ்வேதத் திருமுறைத் திரட்டு

வெளியீடு:
அகில இலங்கைச் சைவக் குருமார் அர்ச்சகர் சபை

தொகுத்தவர்:
'கிரியா வித்தகர்' 'குருமணி'
சிவத்திரு க. சிவபாதசுந்தரக் குருக்கள்
மயிலிட்டி தெற்கு,
தெல்லிப்பழை

— 1982 —

22.10.83

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீடு :

அகில இலங்கைச் சைவக் குருமார் சபை
5 - வது வெளியீடு

பதிப்புரிமை :

அகில இலங்கைச் சைவக் குருமார் அர்ச்சகர் சபையினருக்கே உரியது

தொகுத்தவர் :

'கிரியா வித்தகர்' 'குருமணி'
சிவ த்திரு க. சிவபாதசுந்தரக் குருக்கள்
மயிலிட்டி தெற்கு,
தெல்லிப்பழை

அச்சுப்பதிப்பு :

சைவப்பிரகாச அச்சகம், யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

எமது நாட்டில் தேவாரம், திருவாசகம் முதலிய தமிழ் வேதப் பன்னிரு திருமுறைகளையும், ''சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து'' (சிவபுராணம்), — ''பண்ணியல்பாகப் பத்திமையாலே பாடி'' — ''காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி ஓதுவார்'' (சம்பந்தர்) மிகச் சிலரினும் சிலரே. இந்த நிலையில் குருக்கள் ஐயா அவர்கள் தமிழ் வேதத் திருமுறைகளிலிருந்து; ஆலய மகோற்சவ காலங்களில் பயன்படக் கூடிய திருப் பாடல்களைத் தொகுத்து வெளியிட முன்வந்தமை சிறந்த சிவ தொண்டாகும். பல்லோர்க்கும் பயனளிக்கும் சிவதர்மமுமா கும்.

''பண்ணினூர் அருமறை பாடினூர்'' – என்று ஓதியருளிய சம்பந்தர் பெருமான், தேவாரத் திருமுறைகள்–அருமையான வேதம்–எனக்குறிப்பிடுகின்றூர். ''ஓதினூர் தமிழ் வேதத்தின் ஓங்கிசை'' என்று அதனைச் சேக்கிழார் பெருமான் விதந்தோது கின்றூர். இத்தகைய உயர்ந்த, மகோன்னதமான சக்தி வாய்ந்த திருமுறைத் தோத்திரத் திருப்பாடல்களைப் பண் முறையாக – இராகதாளக் குறிப்புகளுடன் — வேதமந்திரத் தோத்திரங்களாக ஓதப்படவேண்டுமென்பதைத் தொகுப்பா ளர் முகவுரையில் வலியுறுத்தியமை வரவேற்கப்படவேண்டிய தொன்றுகும். வாயில்வந்தபடி வெறும் இசைப் பாடலாகப் பண்ணிசையின் இலக்கண மறியாது, ''பாடினை அருமறை வரன் முறையால்'' என்ற சம்பந்தர் பெருமான் கருத்தைக் கவனித்துத் தக்க குருவினிடம் பயிற்சி பெருமல், திருமுறை பாடுகின்றவர்கள் இதனை முக்கியமாகக் கவனித்தல் வேண் டும். தவருகப் பாடுபவர்கள் சிவத்துரோகத்துக்கு ஆளாவர் என்ற கருத்தினை, ''பண்களார்ப் பாடுவார் கேடிலர் — பழி யிலர்தாமே'' எனச் சம்பந்தர் பெருமான் புலப்படுத்துகின் றூர்.

எனவே, குருக்கள் ஐயா அவர்களின் தொகுப்பு மகோற் ஸவ கொடியேற்றம், கொடியிறக்கம் போன்ற விழாக்களுக்கு உகந்த உறுதுணையளிக்குமென்பதில், — தமிழ் வேத நெறிப் படுத்துமென்பதில் ஐயமேதுமில்லை. அன்னூரின் சீரிய சிவ தொண்டு மென்மேலும் வளர எல்லாம் வல்ல கூத்தப் பிரானை ஏத்தி வணங்குவோமாக.

என்றும் தமிழ் வேத மோதும் பணியில்
V. T. V. சுப்பிரமணியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

பஞ்சபுராணம்

மகோற்ஸவ காலத் திருமுறை

திருப்பள்ளியெழுச்சி

திருவெம்பாவை

திருப்பொற்சுண்ணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

ஆலயங்களிலே ஓதப்பட வேண்டிய உத்தமோத்தம மாகிய தோத்திரங்கள் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம், திருப்புகழ் என்பனவாகும், இவைகள் பூசை முடிந்தவுடன் சதுர்வேத பாராயணம். ஸ்தோத்திரம், திராவிட ஸ்தோத்திரம் என்று கூறப்படும் வரிசையிலே மேலே கூறிய தேவாரம் முதல் திருபுகழ் முடியவுள்ள ஆறு திருப்பாடல்களும் ஓதப்படல்வேண்டும். அதன் பின்னரே "ஆசீர்வாதம்" என்னும் பகுதி இடம்பெற வேண்டுமென்று ஆகமங்களில் கூறப்பட்டிருக்கின்றது.

திருமுறைத் தேவார, திருவாசகங்கள் ஓதப்படுகின்ற போது பண்ணிசைக்குரிய இலக்கண நெறியில், சொல்லிய திருப்பாட்டின் பொருளுணர்ந்து, பயபக்தியோடு சந்தர்ப்பங்களுக்கு ஏற்ற முறையில் ஓதப்பட வேண்டும். இது சாதாரணமாகத் தேவாரத் திருமுறைகள் ஓதுகின்ற அடியார்கள் கவனிக்க வேண்டிய நெறியாகும். இதுவல்லாமல் மகோற்சவ காலங்களிலே நவசந்திகளிலும் ஓதப்படவேண்டிய பண்ணியதிகள் கூறப்பட்டுள்ளன. அந்தந்த சந்திக்குரிய (திக்கு) பண்களில் அமைந்த தேவாரமே ஓதப்படல் வேண்டும்.

பல அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்கி, எல்லோரும் பண்களுக்குரிய தேவாரங்களை நன்கு பயின்று, ஆலயங்களில் ஓதி உணர்ந்து திருவருளுக்குப் பாத்திரராக வேண்டுமென்ற கருத்தினால் பல நூல்களிலிருந்து திரட்டி எழுதியுள்ளோம். மூலஸ்தான பூசை முடிவில் ஓதுவதற்குத் தேவார, புராணங்களையும், வசந்த மண்டபப் பூசை முடிவில் ஓதுவதற்குப் பஞ்சபுராணமாகிய தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம் என்பனவற்றுடன் திருப்புகழ் முதலியனவும், மகோற்சவங்களில் அமைந்த பண்களுக்கு இவ்விரண்டு தேவாரமும், தீர்த்தோற்சவத்தில் ஓதப்படவேண்டிய திருப்பொற்சுண்ணத் திருப்பாடல்களும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்திருமுறைத் திரட்டை எழுதி முடித்த பின்பு எங்கள் ஊரில் உள்ளவரும், எமது பாடசாலை நண்பரும், சென்ற நாற் பத்தைந்து ஆண்டுகளாகப் பண்ணோடு திருமுறைகளை ஓதி மிகவும் தேர்ச்சி பெற்றவரும், எமது தாய்நாடு சென்று சென்னை அருள்மிகு கபாலீஸ்சுர தேவஸ்தானத்தில் தமிழ் நாடு "ஓதுவார் மூர்த்திகள் சபை"யின் ஆறுவது ஆண்டு விழாவில் பங்குபற்றிச் சபையின் முதற் கௌரவத்தையும் ஓதுவார் மூர்த்தியாக அங்கீகாரமும் பெற்றவருமாகிய V. T. V. சுப்பிரமணியம் அவர்களிடம் காண்பித்தேன். அன்பர் அவர்கள் மிக விருப்பத்தினோடு அவற்றை ஏற்றுத் திருத்தம் செய்தும், பண்ணில் அமைந்த தேவாரங்களுக்குரிய இராகம், தாளம் முதலிய குறிப்புக்களை எழுதியும் நெறிப்படுத்தித் தந்தார்கள். அவர் செய்து தந்த இத்தொண்டு சைவ உலகுக்கு மிகப் பெரிய தொண்டாகும். அன்பர் அவர்களுக்கு எனது நன்றி. அவருக்கு நீண்ட ஆயுளும் குறைவற்ற செல்வமும் உண்டாக வேண்டுமென்று இறைவனை வேண்டி ஆசீர் வதிக்கிறேன். இத்திருமுறைத் திரட்டைச் சைவ மக்கள் எல்லோரும் வாங்கிப் பண்ணோடு திருமுறைகளை ஓதி இறைவனை வணங்கிப் பயனடைய வேண்டுமென்று அன்பினோடு கேட்டுக் கொள்கிறேன்.

இங்ஙனம்

க. சிவபாதசுந்தரக் குருக்கள்

மயிலிட்டி தெற்கு,
தெல்லிப்பழை.

## விநாயக வணக்கம்

திருச்சிற்றமபலம்

இராகம்: நாட்டை

திருவும் கல்வியுஞ் சீருந் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகு மாளத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

# பஞ்ச புராணம்

## திருநாவுக்கரசர் தேவாரம்

**(திருத்தாண்டகம்)**

இராகம்: அரிகாம்போதி

திருச்சிற்றம்பலம்

நற்பதத்தார் நற்பதமே ஞான மூர்த்தி
நலஞ்சுடரே நால்வேதத் தப்பால் நின்ற
சொற்பதத்தாற் சொற்பதமுங் கடந்து நின்ற
சொலற்கரிய சூழலா யிதுவுன் தன்மை
நிற்பதொத்து நிலையிலா நெஞ்சந் தன்னுள்
நிலாவாத புலாலுடம்பே புகுந்து நின்ற
கற்பகமே யானுன்னை விடுவே னல்லேன்
கனகமா மணிநிறத் தெங் கடவுளானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

(மாணிக்கவாசக சுவாமிகள்)

இராகம்: மோகனம்

சிந்தனை நின்தனக்காக்கி நாயினேன் தன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கிஐம் புலன்களார
வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே உன்னைத்
தந்தனை செந்தாமரைக் காடனைய மேனித்
தனிச்சுடரே இரண்டுமிலித் தனிய னேற்கே.

## திருவிசைப்பா

( திருமாளிகைத் தேவர் )

இராகம்: ஆனந்த பைரவி

கோலமே மேலை வானவர்கோவே
குணங்குறி யிறந்ததோர் குணமே
காலமே கங்கை நாயகா எங்கள்
காலகாலா காம நாசா
ஆலமே யமுதுண் டம்பலஞ் செம்பொற்
கோயில் கொண்டாட வல்லானே
ஞாலமே தமியேன் நற்றவத் தாயைத்
தொண்டனேன் அணுகுமா றணுகே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சேந்தனுர்

இராகம்: ஆனந்த பைரவி

குழலொலி யாழொலி கூத்தொலி ஏத்தொலி
எங்கும் குழாம் பெருகி
விழவொலி விண்ணளவுஞ் சென்று விம்மி
மிகு திரு வாரூரின்
மழவிடை யாற்கு வழிவழி யாளாய்
மணஞ்செய் குடிப் பிறந்த
பழவடி யாரொடுங் கூடியெம் மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

சேக்கிழார்

இராகம்: மத்தியமாவதி

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன்
திருநடங் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாலிதாம் இன்பமா மென்று
கண்ணி லானந்த அருவிநீர் சொரியக்
கைமல ருச்சிமேற் குவித்துப்
பண்ணினல் நீடி அறிவரும் பதிகம்
பாடினுர் பரவினுர் பணிந்தார்.

திருச்சிற்றம்பலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழ்

அருணகிரிநாதர்

இராகம்: நாட்டை | தாளம் : ஆதி

கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுக னடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவ
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடு மரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புரம் எரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

## மகோற்ஸவ காலங்களில் ஓதப்படவேண்டிய பண்கள்

### சம்பந்தர் தேவாரம்

கணபதி
பண்: தக்கராகம் தாளம்: ரூபகம்
இராகம்: காம்போதி

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையும் சாம்பல் பூச்சுங்கீழ்
உடையும் கொண்ட உருவ மென்கொலோ.

தாளம்: ஆதி

பாலும் நெய்யும் தயிரும் பயின்றாடித்
தோலுநூலும் துதைந்த வ்ரை மார்பர்
மாலும் சோலை புடைசூழ் மடமஞ்ஞை
ஆலும் சோற்றுத் துறைசென் றடைவோமே.

### சம்பந்தர் தேவாரம்

மூஷிகம் [விருஷபம்]
பண்: காந்தாரபஞ்சமம் தாளம்: ஆதி
இராகம்: கேதாரகௌளை

இடரினுந் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உனகழல் தொழு தெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே.
இதுவோ எமை யாளுமாறு ஈவதொன்
றெமக் கில்லையேல்
அதுவோஉன தின்னருள் ஆவடுதுறை யரனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாவுக்கரசர் தேவாரம்

பண்: காந்தாரபஞ்சமம் தாளம்: ஆதி
இராகம்: கேதாரகௌளை

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரனஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலம் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே

## சம்பந்தர் தேவாரம்

சிங்கம்
பண்: நட்டபாடை தாளம்: ரூபகம்
இராகம்: கம்பீரநாட்டை

தோடுடைய செவியன் விடையேறியோர்
 தூவெண் மதி சூடிக்
காடுடைய சுடலைப் பொடி பூசியென்
 உள்ளங் கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்
 தேத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய
 பெம்மான் இவன் அன்றே.

## சுந்தரர் தேவாரம்

மூவரென இருவரென முக்கண்ணுடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும் பொழில் மாதோட்ட
 நன்னகருள்
பாவம்வினை யறுப்பார் பயில் பாலாவியின் கரைமேல்
தேவன்எனை ஆள்வான் திருக் கேதீச்சரத்தானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

## சம்பந்தர் தேவாரம்

மயூரம்
பண் : இந்தளம்
இராகம் : மாயாமாளவகௌளை தாளம் : ஆதி

சடையா யெனுமால் சரண்நீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவளுண் மெலிவே.

## சுந்தரர் தேவாரம்

தாளம் : ரூபகம்

பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா
எத்தால் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
நல்லூ ரருட்துறையுள்
அத்தாவுனக் காளாயினி அல்லே னெனலாமே.

## சம்பந்தர் தேவாரம்

பிரமசந்தி (மத்தி)
பண்: மேகராகம்
இராகம்: நீலாம்பரி தாளம்: கண்டசாப்பு

புலனைந்தும் பொறி கலங்கி நெறிமயங்கி
அறிவழிந்திட் டைமே லுந்தி
அலமந்த போதாக அஞ்சேல் என்றருள்
செய்வான் அமருங் கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென் றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி
முகில் பார்க்குந் திருவையாறே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாளம் : ஆதி

செல்வமல்கிய செல்வர் பராய்த்துறைச்
செல்வர் மேற் சிதை யாதன
செல்வன் ஞான சம்பந்தன் செந்தமிழ்
செல்வமாம் இவை செப்பவே.

## சம்பந்தர் தேவாரம்

இந்திரசந்தி: கிழக்கு
பண்: காந்தாரம்
இராகம்; நவ்ரோஸ் தாளம்: ரூபகம்

வேதத்திலுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பதுநீறு
போதந்தருவது நீறு புன்மை தவிர்ப்பதுநீறு
ஓதத்தகுவது நீறு உண்மையி லுள்ளதுநீறு
சீதப்புனல்வயல் சூழ்ந்த திருஆலவாயான் திருநீறே.

## திருநாவுக்கரசர் தேவாரம்

பண்: காந்தாரம்
இராகம்: நவரோஸ் தாளம்: ரூபகம்

மாதர்ப் பிறைக் கண்ணி யானை
மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப்
புகுவா ரவர்பின் புகுவேன்
யாதும் சுவடு படாமல்
ஐயா றடைகின்ற போது
காதன் மடப் பிடியோடும்
களிறு வருவன கண்டேன்
கண்டேனவர் திருப் பாதம்
கண் டறியாதன கண்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பந்தர் தேவாரம்

அக்கினி சந்தி (தென்கிழக்கு)
பண்: கொல்லி
இராகம்: நவரோஸ் தாளம்: மிச்ரசாப்பு

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணில்நல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

## திருநாவுக்கரசர் தேவாரம்

பண்: கொல்லி
இராகம்: நவரோஸ் தாளம்: ஆதி

சலம்பூவொடு தூபமறந் தறியேன்
தமிழோ டிசைபாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலு முன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்நாவில் மறந்தறியேன்
உலர்ந்தார் தலையிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத் துறை யம்மானே.

## சம்பந்தர் தேவாரம்

யம சந்தி (தெற்கு)
பண்: கௌசிகம் தாளம்: ஆதி
இராகம்: பைரவி

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப் பொருளாவது
நாத னாமம் நமச்சி வாயவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாளம் : ரூபகம்

ஆதியந்த மாயினுய் ஆலவாயில் அண்ணலே
சோதியந்த மாயினுய் சோதியுள்ளோர் சோதியாய்
கீதம்வந்த வாய்மையால் கிளர்தருக் கினுர்க்கல்லால்
ஓதிவந்த வாய்மையால் உணர்ந் துரைக்க லாகுமே.

## சம்பந்தர் தேவாரம்

நிருதி சந்தி (தென் மேற்கு)
பண்: நட்டபாடை
இராகம்: கம்பீரநாட்டை தாளம்: ரூபகம்

உண்ணுமுலை உமையா ளொடும் உடனுகிய ஒருவன்
பெண்ணுகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணுர்ந்தன அருவித்திரள் மழலை முழவதிரும்
அண்ணுமலை தொழுவார்வினை வழுவாவண்ண
[மறுமே.

## சுந்தரர் தேவாரம்

தாளம்: மிச்ரசாப்பு

கொன்றுசெய்த கொடுமையாற் பல சொல்லவே
நின்றபாவ வினைகள்தாம் பல நீங்கவே
சென்று சென்று தொழுமின் தேவர் பிரானிடம்
கன்றினேடு பிடிசூழ் தண்கழுக் குன்றமே.

## சம்பந்தர் தேவாரம்

வருண சந்தி (மேற்கு)
பண்: சீகாமரம்
இராகம்: நாதனுமக்கிரிய தாளம்: திருபுடை

கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தங் கதிர்மதியம்
உள்ளார்ந்தசடைமுடிஎம்பெருமானுர்உறையுமிடம்
தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாம் இருவர்
புள்ளானுர்க் கரையனிடம் புள்ளிருக்கும் வேளுரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீநாளும் நன்னெஞ்சே நினைகண்டாய் யாரறிவார்
சாநாளும்வாழ்நாளும் சாய்க்காட்டெம்பெருமாற்கே
பூநாளும் தலைசுமப்பப் புகழ்நாமம் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே.

## சம்பந்தர் தேவாரம்

வாயு சந்தி (வட மேற்கு)

பண்: தக்கேசி

இராகம்: காம்போதி தாளம்: ஆதி

பூவார் மலர்கொண் டடியார் தொழுவார்
புகழ்வார் வானோர்கள்
மூவார் புரங்கள் எரித்தஅன்று
மூவர்க் கருள் செய்தார்
தூமாமழை நின்றதிர வெருவித்
தொறுவின் னிரை யோடும்
ஆமாம்பிணை வந்தணையும் சாரல்
அண்ணா மலையாரே.

## சுந்தரர் தேவாரம்

ஆலந்தான் உகந்தமுது செய்தானை
ஆதியை அமரர் தொழுதேத்தும்
சீலந்தான் பெரிதும் உடையானை
சிந்திப்பார் அவர் சிந்தையுள்ளானை
ஏலவார் குழலாளுமை நங்கை
என்று மேத்தி வழிபடப்பெற்ற
கால காலனைக் கம்ப னெம்மானைக்
காணக்கண் அடியேன் பெற்றவாறே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பந்தர் தேவாரம்

குபேரசந்தி (வடக்கு)
பண் : தக்கராகம்
இராகம் : காம்போதி
தாளம் : ஆதி

பொடியுடை மார்பினர் போர்விடை யேறிப்
பூதகணம் புடை சூழ
கொடியுடை யூர்திரிந்து ஐயம்
கொண்டு பலபல கூறி
வடிவுடைவாள் நெடுங்கண்ண உமைபாகம்
ஆயவன் வாழ்கொளி புத்தூர்க்
கடிகமழ் மாம லரிட்டுக்
கறைமிடற் றுனடி காண்போம்.

## சுந்தரர் தேவாரம்

வைத்தனன் தனக்கே தலையுமென்னாவும்
நெஞ்சமும் வஞ்ச மொன்றின்றி
உய்த்தனன் தனக்கே திருவடிக் கடிமை
உரைத்தக்கால் உவனே யொக்கும்
பைத்த பாம்பார்த்தோர் கோவணத்தோடு
பாச்சிலாச்சிரமத் தெம் பரமர்
பித்தரே யொத்தோர் நச்சிலராகில்
இவரலா தில்லையோ பிரானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பந்தர் தேவாரம்

ஈசான சந்தி (வடகிழக்கு)
பண் : சாலாபாணி
( பதிலாக - சாதாரி )
இராகம் : பந்துவராளி தாளம் : கண்டசாப்பு

எந்தமது சிந்தைபிரியாத பெருமானென
இறைஞ்சி இமையோர்
வந்துதுதி செய்யவளர் தூபமொடு
தீபமலி வாய்மை யதனுல்
அந்தியமர் சந்திபல அர்ச்சனைகள் செய்ய
அமர்கின்ற அழகன்
சந்தமலி குந்தள நன்மாதிெனுடு
மேவுபதி சண்பை நகரே.

## திருநாவுக்கரசர் தேவாரம்

தாளம்: ரூபகம்

தலையே நீ வணங்காய்
தலைமாலை தலைக்கணிந்து
தலையாலே பலிதேருந் தலைவனைத்
தலையே நீ வணங்காய்.

## திருநாவுக்கரசர் தேவாரம்

பண் : காந்தாரம்
இராகம் : நவரோஸ் தாளம் : கண்டசாப்பு

கைப்போது மலர்தூவிக் காதலித்து வானேர்கள்
முப்போது முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வனை
அப்போது மலர்தூவி ஐம்புலனு மகத்தடக்கி
எப்போது மினியானை என்மனத்தே வைத்தேனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்தம்பத்தடியில் பாடவேண்டியது

## கணபதி தாளம்

| | |
|---|---|
| வேதம் | கஹுநாந்த்வா |
| பண் | தர்க்கராகம் |
| தாளம் | கணபதி தாளம் |
| நிருத்தம் | புஜங்காஞ்சிதம் |
| வாத்தியம் | சித்திரம் |
| இராகம் | உஜ்ஜணி |

## மூஷிக தாளம்

| | |
|---|---|
| வேதம் | பிரம ஜஜ்ஞானம். |
| பண் | காந்தார பஞ்சமம் |
| தாளம் | மூஷிக தாளம் |
| வாத்தியம் | கண வாத்தியம் |
| நிருத்தம் | ஸூசிகா நிருத்தம் |
| இராகம் | அடாணு |

## விருஷம்

| | |
|---|---|
| வேதம் | பிரமஜஜ்ஞானம் |
| பண் | காந்தார பஞ்சமம் |
| தாளம் | விருஷபதாளம் |
| வாத்தியம் | நந்தி வாத்தியம் |
| நிருத்தம் | ஸூசிகா நிருத்தம் |
| இராகம் | அடாணு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவசந்திகள்

பிரம சந்தி
வேதம்
பண்
தாளம்
வாத்தியம்
நிருத்தம்
இராகம்

இந்திர சந்தி
வேதம்
பண்
தாளம்
வாத்தியம்
நிருத்தம்
இராகம்

அக்கினி சந்தி
வேதம்
பண்
தாளம்
வாத்தியம்
நிருத்தம்
இராகம்

யம சந்தி
வேதம்
பண்
தாளம்
வாத்தியம்
நிருத்தம்
இராகம்

மத்தி
பிரம்ம ஜஜ்ஞானம்
மேகராகம்
பிரமதாளம்
சச்சபுடம்
கம்லவர்த்தனம்
மத்யமாவதி

கிழக்கு
திருதார மிந்திரம்
காந்தாரம்
சமதாளம்
சச்சபுடம்
புஜங்காஞ்சிதம்
வேளாவல்லி

தென் - கிழக்கு
துவன்ஞே அக்னே
கொல்லி
அர்த்தாவரணம்
உத்கடிதம்
சுவஸ்தியா நிருத்தம்
வராளி

தெற்கு
சுகன்னப் பந்தா
கௌசிகம்
பிருங்கிணீ
மிளித மட்டயம்
தண்டபாதம்
குஞ்சரீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| **நிருதி சந்தி** | **தென் - மேற்கு** |
| வேதம் | அசுந் வந்த மய ஜமான |
| பண் | நட்டபாடை |
| தாளம் | மல்லதாளம் |
| வாத்தியம் | சம்புடை |
| நிருத்தம் | புஜங்கத்திராசம் |
| இராகம் | பைரவி |
| **வருண சந்தி** | **மேற்கு** |
| வேதம் | தத்துவாயாமீ |
| பண் | சீகாமரம் |
| தாளம் | நவதாளம் |
| வாத்தியம் | சிம்ஹானந்தம் |
| நிருத்தம் | குஞ்சிதம் |
| இராகம் | தேசிகம். |
| **வாயு சந்தி** | **வட - மேற்கு** |
| வேதம் | ஆனோ நியுத்பி |
| பண் | தக்கேசி |
| தாளம் | பலி தாளம் |
| வாத்தியம் | ஜம்புடவாத்தியம் |
| நிருத்தம் | புஜங்க லளிதம் |
| இராகம் | மகுடராமகிரி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| குபேர சந்தி | வடக்கு |
| வேதம் | சோமோவா ஏதஸ்ய |
| பண் | தக்கராகம் |
| தாளம் | கொட்டரி தாளம் |
| வாத்தியம் | பஞ்சமுகி |
| நிருத்தம் | சந்யா நிருத்தம் |
| இராகம் | மாளவி |

| | |
|---|---|
| ஈசான சந்தி | வட - கிழக்கு |
| வேதம் | தமீசானம் ஜகத |
| பண் | சாலா பாணி |
| தாளம் | டக்கரீ |
| வாத்தியம் | கும்பவாத்தியம் |
| நிருத்தம் | பிரமரீ நிருத்தம் |
| இராகம் | தசாட்சரீ |
| நாட்டியம் | பூத நட்டியம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய

# திருவாசகம்

## திருப்பள்ளியெழுச்சி

### திருச்சிற்றம்பலம்

போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத் தெமக்கருண் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாய்எனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 1

அருணனிந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம்நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணலங் கண்ணும்
திரள்நிரை யறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருள்நிதி தரவரும் ஆநந்த் மலையே
அலைகட லேபள்ளி எழுந்தரு ளாயே. 2

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளியொளி உதயத்
தொருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரும் அறிவரி யாய்எமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 4

11448.5-C

பூதங்கள் தோறும்நின் றாயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக் கண்டறிவாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்அரி யாய்எங்கள் முன்வந்(து)
ஏதங்கள் அறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 5

பப்பற வீட்டிருந் துணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றார்அணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப்பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுபழச் சுவையென அமுதென அறிதற்
கரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவனவன் எனவே
எங்களை ஆண்டு கொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு வுத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னு
எதுவெமைப் பணிகொளு மாறதுகேட்போம்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 7

முந்திய முதல்நடு இறுதியு மானாய்
மூவரு மறிகில ரியாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயுநின் னடியார்
பழங்குடில் தொறுமெழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி
அந்தண னுவதுங் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. 8

விண்ணகத் தேவரும் நண்ணவு மாட்டா
விழுப்பொரு ளேயுன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாயுல குக்குயி ரானாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோமவ மேயிந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவு மலரவ னாசைப்
படவுநின் னலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை யாட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. 10

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை

## திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும்
வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்
தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும்
புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதேயெந் தோழி பரிசேலோ ரெம்பாவாய். 1

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய்

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்
தென்
அத்தன்ஆ னந்தன் அமுதன்என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்துடையீர் ஈசன் பழஅடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற்
பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம்
அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ
ரெம்பாவாய். 3

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும்
வந்தாரோ
எண்ணிக்கொடுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப்
போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்(து)
எண்ணிக் குறையில் துயிலேலோ ரொம்பாவாய்

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்களே
பேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மை ஆட்கொண்டருளிக்
கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனே என்(று)
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய். 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானேநீ நென்னலே நாளேவந் துங்களே
நானே எழுப்புவன் என்றலும் நாணுமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்ருே
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட்
கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன்
வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ
ரெம்பாவாய். 6

அன்னே இவையுஞ் சிலவோ பல அமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னுமுன்னம் தீசேர் மெழுகொப்
பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென்
றெல்லோமும்
சொன்னேங்கேள் வெவ்வேருய் இன்னந்
துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளாகிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். 7

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினேங்
கேட்டிலையோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழிஈ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறே
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பவாய்

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப்
பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாழ்பணிவோம் ஆங்கவர்க்கே
பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்
வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோ ரெம்பாவாய்.

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்
முடிவே
பேதை யொருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும்
துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்தன் கோயிற் பிணாப்பிள்ளை
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார் [காள்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்
போற்
செய்யாவெண் ணீருடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயா நீ ஆட்கொண்டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்
தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய்.

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே
தீயாடும்
கூத்தன்இவ் வானுங் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல்
வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான்
பொற்பாதம்
ஏத்தி இருசுஞ்னைநீ ராடேலோ ரெம்பாவாய்.

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப்
பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கண் மலங்கழுவு வார்வந்து சார்தலினல்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்
றிசைந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ
ரெம்பாவாய். 13

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தம்ஆ மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய். 14

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே
நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத்
தான்பணியாள்
பேரரையிற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும்
வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ
ரெம்பாவாய். 15

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள்
இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா் எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ
ரெம்பாவாய். 16

செங்கணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ
ரெம்பாவாய். 17

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ
றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள்
தாம்அகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார்அமுதமுமாய் நின்றான் கழல்பாடி
பெண்ணே இப்பூம்புனல்பாய்ந் தாடேலோ
ரெம்பாவாய் 18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்என்(று)
அங்கப் பழஞ்சொற் புதுக்கும்எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள்
சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகல்எங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ
ரெம்பாவாய். 19

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றிஎல் லாவுயிர்க்கும் தோற்றமாம்
பொற்பாதம்
போற்றிஎல் லாவுயிர்க்கும் போகமாம்
பூங்கழல்கள்
போற்றிஎல் லாவுயிர்க்கும் ஈறும் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும்
பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ
ரெம்பாவாய். 20

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பொற்சுண்ணம்

## திருச்சிற்றம்பலம்

முத்துநல் தாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம்வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன்ஐ யாறன்அம் மானைப்பாடி
ஆடற்பொற் சுண்ணம் இடித்துநாமே. 1

பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நிலாமே
குனிமின் தொழுமின் எங்கோன் எங்கூத்தன்
தேவியும் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 2

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர்கோன் அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்(கு)
ஏய்ந்தபொற் சுண்ணம் இடித்துநாமே. 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PROF. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

காசணி மின்கள் உலக்கையெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்றுவாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 4

அறுகெடுப் பார்அய னும்அரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர்க ணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்லதெ டுக்கவொட்டோம்
செறுவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கண் அப்பற்கு
ஆடற்பொற் சுண்ணம் இடித்துநாமே 5

உலக்கை பலஒச்சு வார்பெரியர்
உலகமெ லாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற் சுண்ணம் இடித்துநாமே 6

சூடகந் தோள்வளை ஆர்ப்பஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்பஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்பஆர்ப்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடக மெல்லடி யார்க்கும் மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்(கு)
ஆடக மாமலை அன்னகோவுக் (கு)
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 7

வாட்டடங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கைபொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற்க டைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப்பொற் சுண்ணமிடித்து நாமே. 8

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கைநாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறையஅட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 9

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆடஆடச்
செங்கயற் கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொ டாடஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத்தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்(கு)
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 11

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன்தன்னை
ஐயனை ஐயர்பி ரானைநம்மை
அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித் தோள்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 12

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமு(து எங்கள்அப்பன்
எம்பெரு மான்இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 13

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாய்இத ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்கை இரைப்ப அராஇரைக்கும்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கைபொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 14

ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை
நாடற்கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்தி
பானல் தடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 15

ஆவகை நாமும்வந் தன்பர் தம்மோ(டு)
ஆட்செயும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர்க ளினும் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 16

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்யஅன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயன்தலை கொண்டுசெண் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடி
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடி
காலனைக் காலால் உதைத்தல்பாடி
இயைந்தன முப்புரம் எய்தல்பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றுடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே. 18

வட்டமலர்க் கொன்றை மாலைபாடி
மத்தமும்பாடி மதியும்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம்ப லத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றுடும் அரவம்பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்துநாமே. 19

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதியுமாய் இரு ளாயினார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயினார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயினார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயினாருக்(கு)
ஆதியும் அந்தமும் ஆயினாருக்(கு)
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 20

திருச்சிற்றம்பலம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயங்களிலே
# திருமுறை ஓதும் முறை

ஆலயங்களிலே திருமுறை ஓதுகின்றவர்கள் ஆசாரசீலர்களாகவும், சிவதீட்சை பெற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

வீபூதி, உருத்திராக்கம் முதலிய சிவசின்னங்களை அணிந்து கொண்டு வடக்கு முகமாக அல்லது கிழக்கு முகமாக நின்று உள்ளத்திலே இறைவனை நினைந்து கண்களில் ஆநந்த நீர்மல்க தேகத்தில் மயிர்க்கூச்செறிய உள்ளன்போடு பஞ்சபுராணங்களையும் ஓதுதல் வேண்டும். திருமுறைகளை ஓதத் தொடங்கும் பொழுதும், முடிக்கும் பொழுதும் திருச்சிற்றம்பலம் என்று சொல்ல வேண்டும்.

திருமுறைகள் ஓதப்படவேண்டிய இடங்களில் வேறு அருட்பாடல்கள் ஓதக்கூடாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோயிலுக்குப் போகும் போது

## செய்யத் தகாத குற்றங்கள்

ஸ்நானஞ் செய்யாது போதல், தோய்த்துலராத வேட்டி தரித்துக் கொண்டு போதல், கால்கழுவாது போதல், ஆசௌசத்துடனே போதல், சட்டையிட்டுக் கொண்டு போதல், போர்த்துக் கொள்ளுதல் சால்வை போட்டுக்கொள்ளுதல், பாதரக்ஷை இட்டுக் கொள்ளுதல், வாகன மேறிக் கொள்ளுதல், குடை பிடித்துக் கொள்ளுதல், வெற்றிலை பாக்கு அருந்துதல், துப்புதல், மலசலங் கழித்தல், மூக்கு நீர் சிந்துதல், மயிர் கோதிக் கொள்ளுதல், சூதாடுதல், சிரித்தல், சண்டையிடுதல், வீண்வார்த்தை பேசுதல், காமப்பற்று வைத்தல். கால்களை நீட்டிக் கொண்டிருத்தல், சயனித்தல், ஆசனத்திலிருத்தல், சுவாமிக்கும் பலிபீடத்துக்கும் இடையாகப் போதல் இடையிலே நமஸ்காரம் பண்ணுதல், சுவாமிக்கு நேராகக் காலை நீட்டி நமஸ்காரம் பண்ணுதல், சுவாமிக்குக் காலை நீட்டி, அங்கப்பிரதட்சணம் பண்ணுதல், நிருமாலியத்தைக் கடத்தல், நிருமாலியத்தை மிதித்தல், தூபி, துவஜத்தம்பம், பலிபீடம் விக்கிரகம் இவைகளின் நிழலை மிதித்தல், விக்கிரகத்தைத் தொடுதல், தெற்கு முகமாகவும் மேற்கு முகமாகவும் வணங்குவது, வீழ்ந்து வணங்குவது, ஆகிய இக்குற்றங்களைச் செய்தவர்கள் நரகத்திலே தண்டிக்கப் படுவார்கள் என்று ஆகமங்களும் சொல்லுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

குளிக்கப்போய்ச் சேறு பூசிக்கொள்ளுவது போலச் சுவாமி தரிசனமாகிய புண்ணியஞ் செய்யப் போய்ப் பாவத்தைத் தேடிக்கொள்வது புத்தியன்று, எல்லோரும் இந்தக் குற்றங்களை நீக்கி விதிப்படி சுவாமி தரிசனஞ் செய்து திருவருள் கடாக்ஷமும் பெற்று உய்யக் கடவார்கள்.

## வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளம் சுரக்கமன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது யிர்கள்வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

—கந்தபுராணம்.

11448.S.C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த வெளியீடு

## அபரக்கிரியை விளக்கம்

விலை: ரூபா 6-90

சைவப்பிரகாச அச்சகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org